# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 23/2026 Addl.W– 1 PW– 6

| | | |
|---|---|---|
| Name | : | மலைச்சாமி (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : | ஜெயசீலன் |
| Village | : | சார்பு ஆய்வாளர், நத்தம் காவல் நிலையம் |
| Taluk | : | நத்தம் |
| District | : | திண்டுக்கல் மாவட்டம் |
| Age | : | 46 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2026

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.சேகர் அவர்கள் இறந்துவிட்டார். அவருடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால், அவருக்காக ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்க அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.07.2021ம் தேதி 16.00 மணிக்கு நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரான திரு.சேகர் என்பவர் பணியில் இருந்தபோது நத்தம் காவல் நிலைய முதல்நிலை காவலர் 1863 திரு.ராமச்சந்திரன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நத்தம் காவல் நிலைய கு.எண். 753/2021 சட்டப்பிரிவு 379 இதச. வாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார், (**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி புகார் மனுவுடன் ராமச்சந்திரன் காவல் நிலையத்தில் ஒப்படைத்த மணல் திருட்டு சம்பந்தப்பட்ட TN 57 BV 6142 என்ற JCB, TN 72 W

7555 மற்றும் TN 57 J 4253 என்ற பதிவெண்கள் கொண்ட டிரைலருடன் கூடிய இரண்டு டிராக்டர்களை அன்றையதினம் 16.30 மணிக்கு நத்தம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகர் மற்றும் 2ம் நிலைக்காவலர் திரு.கணேஷ்பாண்டியன் அவர்கள் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். (**அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர் வழக்கின் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், அதன் நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்து, பின்னர் ஒரு நகலை அவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பிற்பகல் 17.00 மணிக்கு சம்பவ இடமான முளையூரிலுள்ள சோலையப்பன் தோட்டத்தின் அருகில் வைத்து சாட்சிகள் ராமன் மற்றும் அஞ்சலிதேவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். (**அந்த வரைபடம் அ.த.சா.ஆ. 6 ஆகவும், பார்வைமகஜர் அ.த.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சாட்சிகள் ராமச்சந்திரன், பிரபாகர், கணேஷ்பாண்டியன், சோலையப்பன், அஞ்சலிதேவி மற்றும் ராமன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் அன்றையதினமே 16.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் மாயக்கண்ணன், பாலகுரு, கோபாலகிருஷ்ணன் ஆகிய மூவரையும் நத்தம் காவல்நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தும், தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3) பின்னர் 31.07.2021ம் தேதி முளையூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.சுரேஷ் என்பவரை விசாரித்து சம்பவ இடத்தின் புல எண் குறித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழ் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ) பின்னர் வழக்கு சொத்துக்களான TN 57 BV 6142 என்ற JCB, TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற பதிவெண்கள் கொண்ட டிரைலருடன் கூடிய இரண்டு டிராக்டர்களை படிவம்–91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**படிவம் 91 அ.த.சா.ஆ.9**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்துக்களானது நீதிமன்ற RPR No.39/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது**.) பின்னர் மனுவின்பேரில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனங்களின் உரிமையாளர்களான 1) லெட்சுமணன் 2) கோபாலகிருஷ்ணன் (3) வெங்கட பாலகுரு ஆகியோர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்துள்ளார். (**அந்த எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இத்துடன் இவ்வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 08.09.2021ம் தேதி சட்டப்பிரிவு 379 இ.தச.வின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் அ.த.சா.3 மற்றும் அ.த.சா.5 ஆகியோர் சொன்ன வழக்கின் உண்மை சம்பவம் குறித்து சார்பு ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4) இவ்வழக்கில் 30.07.2021ம் தேதி திரு.ராமச்சந்திரன் மற்றும் திரு.பிரபாகர் ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றது தொடர்பாக தினசரி நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் மனு மற்றும் புலன் விசாரணை அதிகாரி திரு.சேகர் அவர்களின் விசாரணையிலும் சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் உள்ள கிணற்று கிராவல் மண் வெட்டி எடுக்கப்பட்டதாக தான் தெரிய வருகிறது என்றால் சரிதான். கிணற்று கிராவல் மண் ஆனது எந்த பகுதியில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது என்ற விபரம் சேகர் அவர்கள் விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். பொதுவாக விவசாய நோக்கங்களுக்காக கிணற்றில் உள்ள மண் ஆனது தூர்வாரப்பட்டு வெட்டி எடுக்கப்படும் என்றால் சரிதான். பொதுவாக நல்ல நோக்கங்களுக்காக கிணற்று மண் எடுக்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். எந்தெந்த எதிரி, எந்தெந்த டிராக்டரை பயன்படுத்தி வந்தார்கள் என்று புகாரிலும், விசாரணையிலும் தெரிய வரவில்லை என்றால் சரிதான்.

5) சோலையப்பன் என்பவரது தோட்டத்தின் அமைப்பு குறித்து அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

சோலையப்பனின் தோட்டத்திற்குள் வைத்து தான் வழக்கு சொத்துக்கள் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம்–9ல் கிராவல் மண்ணின் மதிப்பு குறித்து தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். மண் வெட்டுவதற்கு கடப்பாரையோ அல்லது மண்வெட்டியோ கைப்பற்றப்பட்டதாக அத்தாட்சியில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். மண்ணை அள்ளுவதற்கு ஜேசிபி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜேசிபி வாகனம் ஆனது சோலையப்பன் தோட்டத்தில் வைத்து பிடிக்கப்பட்டதாக தான் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு யூனிட் கிராவல் மணல் ஆனது எவ்வளவு எடை உள்ளது என்றோ, அதன் மதிப்பீடு பற்றியோ சான்று பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மணலின் எடை குறித்தோ அதன் மதிப்பு குறித்த தெரிவிக்காமல் ஒரு யூனிட் கிராவல் மண் என்று அளவு சொல்வது தவறானது என்றால் சரியல்ல. டிராக்டர் என்று சொல்வது பெரியதா அல்லது சிறியதா என்றால் சிறியது. பொதுவாக சிறிய டிராக்டரில் 2.5 முதல் 3 யூனிட் வரையிலான மண் அள்ளலாம் என்றால் சரியல்ல. பொதுவாக 2 யூனிட் வரை சிறிய டிராக்டரில் மண் அள்ளலாம்.

6) நான் சொல்வது போல் மண் அள்ளலாம் என்றால் 2 டிராக்டரிலும் 2+2=4 யூனிட் வரை மண் அள்ளலாம் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இரண்டு டிராக்டரில் எந்த டிராக்டரின் ட்ரெய்லரில் ஒரு யூனிட் டிராவல் மண் இருந்ததாக புகாரிலும், சார்பு ஆய்வாளர் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கிராவல் மண் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கிராவல் மண்ணின் மதிப்பு குறித்தும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். படிவம் 91 இல் சாட்சிகள் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். கிராவல் மண் என்ன ஆனது என்று விசாரணையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்

அளித்த சான்றிதழில் லேட்.மாயழகனம்பலம் என்பவருக்கு சொந்தமான பட்டா எண்.594–ல் கண்ட புல எண்.248/1A என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வருவாய்த் துறையினர் அவர்களால் மண் எடுத்தது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வருவாய் துறையினருக்கு மண் எடுத்தது சம்பந்தமாக தகவல் தெரிந்திருந்தும் மேற்படி துறையினரால் நடவடிக்கை எடுக்கப்படாமல் போலீசாரால் மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் கிராவல் மண் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சோலையப்பன் தோட்டத்திற்கு அருகிலுள்ள ராஜாமணி, வெள்ளை ஆகியோர்களை சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7) இவ்வழக்கில் வாகனங்களின் உரிமையாளர்கள் வழக்கிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் நீக்கல் அறிக்கையில் சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் ஆங்காங்கே கொட்டி கிடந்த கிணற்று கிராவல் மண்ணை ஒழுங்குப்படுத்தி வைப்பதற்காக வாடகைக்கு செல்வதாக சொன்னதாக தெரிவித்து தான் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரிகள் நேர்மையற்ற முறையில் கிராவல் மண்ணை வெளியே எடுத்து வரவில்லை என்றாலும், சார்பு ஆய்வாளர் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம் கடந்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்லையென்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.11 14:03:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்